MELUR MUNICIPALITY

Minutes of the Council Meeting held on 31.10.2022(Ordinary)

| Resolution No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|
| | **31.10.2022 ஆம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்டம்**<br>முன்னிலை: **திரு.உ.முகமதுயாசின்**, நகர்மன்றத்தலைவர் | |
| 155 | **மன்றப்பொருள் எண்.1**<br>இந்நகராட்சி ஆணையாளர் அறையில் உள்ள A.C பழுதானதை தொடர்ந்து A.C. ஐ பழுதுநீக்கம் செய்யவும், ஆணையாளர் அறையில் உள்ள மின்வயர்கள் பழுதானதை அனைத்தையும் பழுதுநீக்கம் செய்யும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம் | அனுமதிக்கப்பட்டது. |
| 156 | **மன்றப்பொருள் எண்.2**<br>இந்நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் பொதுப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள ஒப்பந்ததாராக பதிவு செய்ய வேண்டி திரு.ஜி.செந்தில்குமார் என்பவர் சமர்ப்பித்துள்ள விண்ணப்பம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தொழில்நுட்ப ரீதியாக ஆவணங்கள் சரியாக உள்ளதால் தனியரது விண்ணப்பத்தினை ஏற்று மேலூர் நகராட்சியில் நடைபெறும் பொதுப்பணிகளுக்கு ஐந்தாம்நிலை ஒப்பந்ததாராக பதிவுசெய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 157 | **மன்றப்பொருள் எண்.3**<br><br>மதுரை மாவட்ட நகர்ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ந.க.எண்.3537/2022/ம.மா. நாள்.10.08.2022ந்தேதிய கடிதத்தில், திரு.ப.ஸ்ரீகண்ணன், சு.சேகர், ப.மணி முத்துச்சாமிபட்டி, மேலூர் அவர்களின் இடமான மதுரை மாவட்டம், மேலூர் நகராட்சிக்குட்பட்ட நகர பழைய புல எண்.356/1(ப), 3(ப), புதிய நகரளவு வார்டு பி, பிளாக் 25, ந.அ.எண்.3/18, 21, 22 மற்றும் 24 ல் 1.05 ஏக்கர் பரப்பளவு உள்ள விவசாய நிலத்தினை விவசாய நில உபயோகத்திலிருந்து கலப்பு குடியிருப்பு உபயோகத்திற்கு நிலப்பயன் மாற்றம் கோரப்பட்டுள்ளதை தொடர்ந்து,திரு.ப.ஸ்ரீகண்ணன், சு.சேகர், ப.மணி என்பவர்களின் இடத்தினை விவசாய நிலத்தினை விவசாய நில உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோகப் பகுதியாக மாற்றம் செய்திட மேலூர் உள்ளூர் திட்டக்குழும தீர்மானித்து தீர்மானம் இயற்றி அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து திரு.ப.ஸ்ரீகண்ணன், சு.சேகர், ப.மணி என்பவரின் இடத்தினை விவசாயநில உபயோகப்பகுதியிலிருந்து குடியிருப்பு உபயோகப் பகுதியாக மாற்றம் செய்திட ஆட்சேபனை இல்லை என தெரிவிக்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br><br>திரு.ப.ஸ்ரீகண்ணன், சு.சேகர், ப.மணி என்பவரின் இடத்தினை விவசாய நில உபயோகப் பகுதியிலிருந்து குடியிருப்பு உபயோகப் பகுதியாக மாற்றம் செய்ய நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் மதுரைஅவர்களுக்கு பரிந்துரை செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | பரிந்துரை செய்யப்பட்டது. |
| 158 | **மன்றப்பொருள் எண்.4**<br><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் TN59 BS 9536 டம்பர் பிளேசர் வாகனத்தில் டம்பர் பின்கள் 11 எண்ணம் பழுதாகியுள்ளது. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி டம்பர் பின்களில் உள்ள பழுதுகளை ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பழுதுநீக்கம் செய்தவற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.6.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 159 | **மன்றப்பொருள் எண்.5**<br><br>இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிகள்மேற்கொள்ள 12.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. | அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | மதிப்பீடு ரேட்டைவிட குறைந்த அளவு ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் | மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| **1** | **2** | 3 | 4 | **5** |
| | **பொது நிதி** | | | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட சர்வே எண்.233/5, பெரியகருப்பன் காலணியில் தூய்மைப்பணியாளர் குடியிருப்பு கட்ட நகர் ஊரமைப்பு துறை வழிகாட்டுதலின்படி வரைபடம் தயார்செய்தல்/கட்டிடப்பணி மேற்கொள்ள மண்ணின் தன்மை(SBC) அறிதல்/ அதற்கேற்ப கட்டிட வடிவமைப்பு பெறுதல் /விரிவான மதிப்பீடு தயார்செய்தல்/ டுபிட்கோ நிறுவனத்தில் சமர்ப்பித்து ஒப்புதல் பெறுதல் /நிர்வாக அனுமதி /தொழில்நுட்ப அனுமதி பெறுதல்/ பணிநடைபெறும் பொழுது மேற்பார்வை செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள Technical Consultant நியமனம் செய்யும் பணி. | 10.00 | COS Consultancy , Madurai<br>–0.05% குறைவு | Unique Consultants, Madurai<br>0.80% அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட சர்வே எண்.2/3ஏ மேலூர் நகராட்சி பேருந்து நிலையத்தினை மேம்பாடு மற்றும் மறுகட்டமைப்பு செய்ய நகர் ஊரமைப்பு துறை வழிகாட்டுதலின்படி வரைபடம் தயார்செய்தல்/கட்டிடப்பணி மேற்கொள்ள மண்ணின் தன்மை(SBC) அறிதல்/ அதற்கேற்ப கட்டிட வடிவமைப்பு பெறுதல் /விரிவான மதிப்பீடு தயார்செய்தல்/ டுபிட்கோ நிறுவனத்தில் சமர்ப்பித்து ஒப்புதல் பெறுதல் /நிர்வாக அனுமதி /தொழில்நுட்ப அனுமதி பெறுதல்/ பணிநடைபெறும் பொழுது மேற்பார்வை செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள Technical Consultant நியமனம் செய்யும் பணி | 14.00 | COS Consultancy , Madurai –0.05% குறைவு | Unique Consultants, Madurai 0.80% அதிகம் |
| 3 | இந்நகராட்சிக்குட்பட்ட சர்வே எண்.233/10, வார்டு ஏ, பிளாக் 29, சந்தைப்பேட்டையில் புதிதாக வாரச்சந்தை கட்டிடம் கட்ட நகர் ஊரமைப்பு துறை வழிகாட்டுதலின்படி வரைபடம் தயார்செய்தல்/கட்டிடப்பணி மேற்கொள்ள மண்ணின் தன்மை(SBC) அறிதல்/ அதற்கேற்ப கட்டிட வடிவமைப்பு பெறுதல் /விரிவான மதிப்பீடு தயார்செய்தல்/ டுபிட்கோ நிறுவனத்தில் சமர்ப்பித்து ஒப்புதல் பெறுதல் /நிர்வாக அனுமதி /தொழில்நுட்ப அனுமதி பெறுதல்/ பணிநடைபெறும் பொழுது மேற்பார்வை செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள Technical Consultant நியமனம் செய்யும் பணி | 10.00 | COS Consultancy , Madurai –0.05 % குறைவு | Unique Consultants, Madurai 0.70% அதிகம் |

பெறப்பட்ட மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு<br>வ.எண்.1ல் உள்ள பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் COS Consultancy , Madurai, என்பவர் –0.05% சதவீதம் குறைத்து ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதையும், வ.எண்.2ல் உள்ள பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் COS Consultancy , Madurai என்பவர் –0.05% சதவீதம் குறைத்து ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதையும், வ.எண்.3ல் உள்ள பணிக்கு கலம் எண்.4ல் கண்ட ஒப்பந்தக்காரர் COS Consultancy , Madurai என்பவர் –0.05 % சதவீதம் குறைத்து ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 160 | **மன்றப்பொருள் எண்.6**<br><br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை அரசாணை (MS) எண்.145, நாள்.14.10.2022ன் அரசாணையில் மேலூர் நகராட்சி பகுதிகளில் உள்ள 1706 எண்ணிக்கை தெருவிளக்குகளை LED ஆற்றல் மிகு தெரு விளக்குகளாக மாற்றம் செய்வதற்கும், தெரு விளக்குகள் புதிதாக அமைப்பதற்கு ரூ.159.11 இலட்சம் மாநில நகர்ப்புற அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (SUIDF) கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இத்திட்ட நிதியை இந்நகராட்சிக்கு கடனாக வழங்குவதுடன், இக்கடனை ஆறு ஆண்டுகளுக்குள் 5 சதவிகித வட்டியுடன் (ஆண்டிற்கு) (5% Per annum) திரும்ப செலுத்துவதற்கு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே, மேற்கண்ட அரசாணையின்படி இந்நகர்ப்பகுதியில் 1706 எண்ணிக்கை தெருவிளக்குகளை LED ஆற்றல் மிகு தெரு விளக்குகளாக மாற்றம் செய்வதற்கான மற்றும் நிதியினை கடனாக தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) மூலம் பெறுவதற்கும் இக்கடன் தொகையை ஆறு வருடங்களில் 5 சதவிகித வட்டியுடன் (ஆண்டிற்கு) (5% Per annum) திரும்ப செலுத்துவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தெருவிளக்கு பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதிபெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 161 | **மன்றப்பொருள் எண்.7**<br>இந்நகராட்சி அலுவலக வளாகப்பகுதியில் உள்ள நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி பொறியாளருக்கான உள்ள கட்டிடங்கள் மற்றும் இந்நகராட்சி அருகில் உள்ள அங்கன்வாடி மையம் ஆகியவை பழுதடைந்துள்ளது. மேலும் மேற்படி கட்டிடங்களில் ஆதார் மையம், மற்றும் இ–சேவை மையம் இயங்கி வருகிறது. தினந்தோறும் பொதுமக்கள் அதிக அளவில் அங்கு ஆதார் மற்றும் இ–சேவைகள் எடுக்க வருகின்றனர். இந்நிலையில் பருவமழை காரணமாக கட்டிடங்கள் பழுதடைய வாய்ப்புள்ளதால் மேற்படி ஆதார் மையத்தை, இ–சேவை மையத்தை மேலும் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யவும் , மேற்கண்ட சேதமடைந்த கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்திவிட்டு நகராட்சி பயன்பாட்டிற்கான இரண்டு சக்கர, நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கான கூடம் அமைப்பதற்கான உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 162 | **மன்றப்பொருள் எண்.8**<br>TN 59 BU 1296 ஈப்பு வாகனத்திற்கு இன்சூரன்ஸ் 25.10.2022 அன்றுடன் முடிவடைகிறது. மேற்கண்ட ஈப்பு வாகனத்திற்கு ஒரு வருட காலத்திற்கு இன்சூரன்ஸ் தொகை ரூ.14199/– ஐ United India Insurance company Limited, நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 163 | **மன்றப்பொருள் எண்.9**<br>இந்நகராட்சிக்குட்பட்ட உரக்கிடங்கில் அமைக்கப்பட்டுள்ள FSTP யில் உள்ள மின் மோட்டாருக்கு சூரியஒளி (சோலார்) மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு அதன்மூலம் இயங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது வடகிழக்கு பருவமழைக்காலமாக இருப்பதால் சூரியஒளி (சோலார்) மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு மின்மோட்டாரை இயக்க இயலாத காரணத்தினால் பொதுசுகாதாரப்பணி பாதிப்படைகிறது. இதனை நிரந்தரமாக தீர்வு செய்யும் பொருட்டு கழிவுநீர் சீராக வெளியேற மின் இணைப்புடன் கூடிய மின்மோட்டார் பொருத்த தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.1.85இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 164 | **மன்றப்பொருள் எண்.10**<br>சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.23124/ஆர்–1/2022–1 நாள்.23.09.2022 ன்படி, ‘‘இரவின் நிழல்’’ திரைப்படத்திற்கு 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அதிகார அமைப்புகளின் கேளிக்கை வரி சட்டத்தின் பிரிவு 11(1)ன் படி கேளிக்கை வரி விலக்கு அளிக்க திரு.ராதாகிருஷ்ணன் பார்த்திபன் திரைக்கலைஞன் மனுவில் கோரப்பட்டுள்ளதை தொடர்ந்து ‘‘இரவின் நிழல்’’ திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1870/2022/அ1 | அனுமதிக்கப்பட்டது. |
| 165 | **மன்றப்பொருள் எண்.11**<br>இந்நகராட்சி பொறியியல் பிரிவில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள 19.10.2022 அன்று மின்ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. | அனுமதிக்கப்பட்டது. |

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத் தில் | மதிப்பீடு ரேட்டைவிட குறைந்த அளவு ஒப்பந்தப் புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் | மதிப்பீடு ரேட்டை விட அதிக அளவு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | **கல்விநிதி 2022–23** | | | |
| 1. | மேலூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பணிபுரியும் பணியாளர்கள் /மாணவிகள் பயன்பெறும் வகையில் Napkin Destroyer கருவி-4 எண்ணம் விநியோகம் செய்யும் பணி. | 10.00 | Everest Corporation , Coimbatore –0.11 % குறைவு | திரு.எம்.லத்திப் 1.35 % அதிகம் |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>குடிநீர் வழங்கல் நிதி 2022–23</td><td></td><td></td><td></td></tr>
<tr><td>2.</td><td>வார்டு எண்.12ல் காந்தி நகர் பகுதியில் உள்ள பெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாததால் புதிதாக குடிநீர் பகிர்மான குழாய் அமைக்கும் பணி.</td><td>0.90</td><td>திரு.சத்தியவதி<br>–0.38 % குறைவு</td><td>திரு.எம்.லத்திப்<br>3.75 % அதிகம்</td></tr>
</table>
பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br>
அலுவலக குறிப்பு<br>
வ.எண்.1ல் உள்ள பணிக்கு கலம் எண்.4ல் கண்ட Everest Corporation , Coimbatore என்பவர் –0.11% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதையும், வ.எண்.2ல் உள்ள பணிக்கு கலம் எண்.4ல் கண்ட திருமதி.சத்தியவதி என்பவர் –0.38% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>166</td>
<td>மன்றப்பொருள் எண்.12<br>
மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஓராண்டு ஆட்சியில் இந்நகராட்சியின் பொதுமக்கள் பயன்பாட்டிற்கென நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்த விளம்பரம் தினமலர் நாளிதழில் 04.10.2022 அன்று விளம்பரம் வெளியிடப்பட்டதற்கு விளம்பரக்கட்டணம் ரூ.24663/– தினமலர் நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>167</td>
<td>மன்றப்பொருள் எண்.13<br><br>
இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் ஒப்பந்த நிறுவனத்தில் பணிபுரிந்த பணியாளர்கள், திரு.மதுரை வீரன் மற்றும் 19 நபர்களால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் இந்நகராட்சி மீது கீழ்க்கண்ட விபரப்படி வழக்கு தொடரப்பட்டுள்ளது. பின்பு நகராட்சி சார்பாக மேல்முறையீடு செய்யப்பட்டது.</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| வ.எண். | வழக்கு தொடர்ந்த நபர்களின் பெயர் | வழக்கு எண். |
|---|---|---|
| 1. | மதுரை வீரன் | W.P.MD.No22579/2019 |
| 2. | ஏ.சுரேஷ்குமார் | W.P.MD.No23480/2019 |
| 3. | சின்னச்சாமி | W.P.MD.No.13229/2021 |
| 4. | எம்.காளியம்மாள் | W.P.MD.No.13230/2021 |
| 5. | ஏ.பெருமாள் | W.P.MD.No.13231/2021 |
| 6. | எம்.முருகன் | W.P.MD.No.13260/2021 |
| 7. | எஸ்.ராக்கம்மாள் | W.P.MD.No.13261/2021 |
| 8. | எம்.இருளாயி | W.P.MD.No.13262/2021 |
| 9. | முத்துலெட்சுமி | W.P.MD.No.13263/2021 |
| 10. | யு.சேவுகமூர்த்தி | W.P.MD.No.13264/2021 |
| 11. | எம்.பஞ்சு | W.P.MD.No.13265/2021 |
| 12. | எஸ்.குமார் | W.P.MD.No.13266/2021 |
| 13. | பி.பாண்டியம்மாள் | W.P.MD.No.13267/2021 |
| 14. | யு.மூக்காயி | W.P.MD.No.13268/2021 |
| 15. | மஞ்சுளா | W.P.MD.No.13269/2021 |
| 16. | எம்.பஞ்சு | W.P.MD.No.13270/2021 |
| 17. | எஸ்.பாண்டிச்செல்வி | W.P.MD.No.13273/2021 |
| 18. | கே.செல்வபாண்டி | W.P.MD.No.13274/2021 |
| 19. | டி.ஜி.சுப்பிரமணி | W.P.MD.No.12613/2021 |
| 20. | கார்த்திக் | W.P.MD.No.12902/2021 |

மேலும் மேற்கண்ட 20 நபர்கள் Contempt petition சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்ததால் அதனை vacate petition தாக்கல் செய்தவதற்கும், கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு.ஆர்.சுரேஷ்குமார் என்பவருக்கு வழக்கு கட்டணம் கட்டணம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

<table>
<tr>
<td>168</td>
<td>
மன்றப்பொருள் எண்.14<br>
மேலூர் நகராட்சி சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூய்மைப்பணிகளை மேற்கொள்ள ஜெய்சீரடி சாய் மேன்பவர் நிறுவனத்தின்மூலம் ஒப்பந்தஅடிப்படையில் 40 பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட நிறுவனத்திற்கான ஒப்பந்த காலம் வருகின்ற 30.09.2022 உடன் முடிவடைகிறது. சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வழக்கு எண்.W.P.No.1086/2019 நடைபெற்று வருவதாலும் , ஒப்பந்தப்புள்ளி கோர இடைக்கால உத்தரவு நிலுவையில் உள்ளதாலும், புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலை உள்ளதாலும், மேற்கண்ட நிறுவனத்தினரால் 2020–2021 ஆண்டிற்கான ஒப்பந்தப்புள்ளி தொகையினை ரூ.418.90/– என்ற தினக்கூலி அடிப்படையில் தொடர்ந்து பணிமேற்கொள்ள ஜெய்சீரடி சாய் மேன்பவர் நிறுவனம் சம்மதம் தெரிவித்துள்ளதின்பேரிலும், இந்நகராட்சி பொதுமக்களின் பொதுசுகாதாரப் பணியின் அவசியம் கருதியும் நிர்வாக செலவினத்தைக் கருத்தில் கொண்டும், 01.10.2022 முதல் 31.12.2022 முடிய உள்ள காலத்திற்கு ஜெய்சீரடி சாய் மேன்பவர் ஏஜென்சிக்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விகிதப்படி நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>
அலுவலகக்குறிப்பு<br>
அ) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ஆ) பொதுசுகாதார அவசரஅவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று நிறுவனத்திற்கு நீட்டிப்பு உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>169</td>
<td>
மன்றப்பொருள் எண்.15<br>
மேலூர் நகராட்சிக்குச் சொந்தமான தற்காலிக தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை 2022–2023ம் ஆண்டில் 01.11.2022 முதல் 31.03.2023 முடிய உள்ள காலத்திற்கு ஏலம் /ஒப்பந்தப்புள்ளி 14.10.2022, 21.10.2022 மற்றும் 28.10.2022 ல் ஏலம் /ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்படி ஏலம் /ஒப்பந்தப்புள்ளிகளில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் .<br>
பொதுஏலம்
<table>
<tr><th>வ. எண்.</th><th>பெயர் / முகவரி</th><th>ஏலம்கோரியத் தொகை ரூ.</th><th>ஏலம் நடைபெற்ற நாள்.</th></tr>
<tr><td>1.</td><td>எவரும் கலந்துகொள்ளவில்லை.</td><td></td><td>14.10.2022</td></tr>
<tr><td>2.</td><td>எவரும் கலந்துகொள்ளவில்லை.</td><td></td><td>21.10.2022</td></tr>
<tr><td>3.</td><td>எவரும் கலந்துகொள்ளவில்லை.</td><td></td><td>28.10.2022</td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
</table>
</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

**ஒப்பந்தப்புள்ளி**

| வ. எண். | பெயர் / முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை (வருமான வரி நீங்கலாக) | ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற நாள். |
|---|---|---|---|
| 1.. | எம்.லத்திப், த/பெ முகமது இப்ராஹிம் 34, நாளங்காடி தெரு, மேலூா். | ரூ.6000 (நாள் ஒன்றுக்கு) 151 நாட்கள் x 6000= 906000 | 14.10.2022 |
| | ஆா்.செல்வமுருகன், த/பெ. ரெங்கன், சிவன்கோவில் சன்னதி தெரு, மேலூா். | ரூ.5700 (நாள் ஒன்றுக்கு) 151 நாட்கள் x 5700= 860700 | 14.10.2022 |
| 2. | எம்.லத்திப், த/பெ முகமது இப்ராஹிம் 34, நாளங்காடி தெரு, மேலூா். | ரூ.7200 (நாள் ஒன்றுக்கு) 151 நாட்கள் x 7200= 1087200 | 21.10.2022 |
| | ஆா்.செல்வமுருகன், த/பெ. ரெங்கன், சிவன்கோவில் சன்னதி தெரு, மேலூா். | ரூ.6900 (நாள் ஒன்றுக்கு) 151 நாட்கள் x 6900= 1041900 | 21.10.2022 |
| 3. | எம்.லத்திப், த/பெ முகமது இப்ராஹிம் 34, நாளங்காடி தெரு, மேலூா். | ரூ.10950 (நாள் ஒன்றுக்கு) 151 நாட்கள் x 10950= 1653450 | 28.10.2022 |
| | ஆா்.செல்வமுருகன், த/பெ. ரெங்கன், சிவன்கோவில் சன்னதி தெரு, மேலூா். | ரூ.9900 (நாள் ஒன்றுக்கு) 151 நாட்கள் x 9900= 1494900 | 28.10.2022 |

அ) ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகளில் மூன்று தேதிகளில் நடைபெற்ற பொதுஏலத்தில் எவரும் கலந்துகொள்ளவில்லை. 14.10.2022 மற்றும் 21.10.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் அரசு நிா்ணயம் செய்த தொகையை விட மிகக்குறைவாக இருந்ததால் 28.10.2022 அன்று மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரிசை எண்.3ன்படி அதிகமான தொகைக்கு திரு.லத்திப் என்பவா் ரூ.10950/—க்கு கேட்டுள்ளாா்.

ஆ) ஏற்கனவே நடைபெற்றுவந்த தினசரி சந்தையில் 106 கடைகள் செயல்பட்டு வந்தன. மேற்படி கடைகளில் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி மூலம் 2019—20ம் ஆண்டில் ரூ.70,03,000/—மும், 2020—2021ம் ஆண்டில் கோவிட் காலமாக இருந்ததால் தினசரி சந்தை இயங்காததால் ரூ.61,71,062/—மும், 2021—2022ம் ஆண்டில் ரூ.77,20,808/—ம் தொகைக்கு ஏலம் விடப்பட்டுள்ளது.

தற்போது தினசரி சந்தை புதிதாக கட்டும் பணி ரூ.7.87கோடி மதிப்பீட்டில் கட்டும் பணி நடைபெற்று வருவதால் தினசரி சந்தையினை தற்காலிகமாக வாரச்சந்தை இயங்கி வரும் இடத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. வாரச்சந்தையில் இயங்கி வரும் தற்காலிக தினசரி சந்தையில் தற்பொழுது 88 கடைகளில் 44 கடைகள் மட்டுமே காய்கறி வியாபாரிகள் மூலம் செயல்பட்டு வரப்படுகிறது என வருவாய் ஆய்வா் குறிப்பு வழங்கியுள்ளாா். மேலும் 14.10.2022 மற்றும் 21.10.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையை விட 28.10.2022 ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் திரு.எம்.லத்திப் என்பவா் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி கூடுதலாக உள்ளதாலும் , 2022—23ம் ஆண்டில் 10/2022 மாதம் முடிய ரூ.4824048 வசூல் செய்யப்பட்டுள்ளது. தற்போது ஒருநாள் ஒன்றுக்கு ரூ.10950/— வீதம் 151 நாட்களுக்கு ( 01.11.2022 முதல் 31.03.2023 முடிய உள்ள காலங்களுக்கு ரூ.1686519 (வருமானவரி உட்பட) உரிமத் தொகை வரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| | மேற்படி நடப்பாண்டிற்குரிய தினசரி சந்தையின் கேட்பு மற்றும் வசூல் தொகை ரூ.6510567/–க்கும், மேலும் இந்த நடப்பு ஆண்டில் தினசரி சந்தையானது தற்காலிகமாக 20.07.2022 முதல் வாரசந்தையில் 44 கடைகளுடன் தற்பொழுது இயங்கி வருவதாலும், மூன்று முறை ஏலம்விடப்பட்டும் வாரச்சந்தையில் தற்காலிக தினசரி சந்தையாக செயல்படுவதாலும் நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படாமலும் திரு.எம்.லத்திப் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியின் கூடுதல் தொகையினை ஏற்று குத்தகை இனங்களின் பொதுஏல நிபந்தனைகள் மற்றும் சிறப்புக்கட்டுபாடுகளுக்குட்பட்டு 01.11.2022 முதல் 31.03.2023 முடிய உள்ள காலத்திற்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br>வாரச்சந்தையில் தற்காலிகமாக இயங்கி வரும் தினசரி சந்தையில் தற்பொழுது 88 கடைகளில் 44 கடைகள் மட்டுமே காய்கறி வியாபாரிகள் மூலம் செயல்பட்டு வரப்படுகிறது என வருவாய் ஆய்வர் குறிப்பு வழங்கியுள்ளதாலும், மேலும் 14.10.2022 மற்றும் 21.10.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையைவிட 28.10.2022 ல் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் திரு.எம்.லத்திப் என்பவர் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி கூடுதலாக உள்ளதாலும், இந்த நடப்பு ஆண்டில் தினசரி சந்தையானது 20.07.2022 முதல் வாரசந்தையில் 44 கடைகளுடன் தற்காலிகமாக தற்பொழுது இயங்கி வருவதாலும், இந்நகராட்சியின் வருவாயினை கருத்தில்கொண்டு உயர்ந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்த உரிமதாரருக்கு உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | |
| 170 | **மன்றப்பொருள் எண்.16**<br>மேலூர் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை புதிதாக கட்டுவதற்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.20028/2021/டி2 நாள்.08.09.2021ல் நிர்வாக அனுமதி வழங்கியதின் அடிப்படையில் , கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022–23 ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட சர்வே எண்.39, வார்டு 23ல் உள்ள தினசரி சந்தையினை மேம்படுத்தும் பணி ரூ.787.00இலட்சம் மதிப்பீட்டில் இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண்.1545/2021/இ1 நாள்.18.04.2022ன்படி பணிகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. ஆகையால் தினசரி சந்தையில் அமைந்துள்ள 34 கடைகளையும் இடித்து அப்புறப்படுத்த கடைகளின் உரிமதாரருக்கு இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் ந.க.எண்.591/2021/அ2 நாள்.25.05.2022ன்படி, கடையினை 31.05.2022க்குள் காலிசெய்ய அறிவுறுத்தப்பட்டதின்படி கடை உரிமதாரர்கள் காலிசெய்ய மறுத்ததால் வட்டாட்சியர் தலைமையில் சமாதான கூட்டம் 19.07.2022 அன்று நடைபெற்றது. அதன்அடிப்படையில் கடை உரிமததாரர்கள் 20.07.2022க்குள் காலிசெய்ய அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையில் கடையினை காலிசெய்தனர். மேற்படி தினசரி சந்தையில் இயங்கிவந்த 34 கடைகளுக்கும் 01.08.2022 முதல் தினசரி சந்தையில் புதிதாக கடைகள் கட்டி உரிமதாரருக்கு ஒப்படைக்கும் நாள் வரை அரசு தெரிவிக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு உரிமம் நீட்டிப்பு செய்யாமலும், மேற்படி கடைகளுக்கான மாதாந்திர வாடகை தொகையினை கேட்பு பட்டியலில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td>171</td>
<td>
மன்றப்பொருள் எண்.17<br>
இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் கொசு உற்பத்தியை கட்டுப்படுத்த முதிர்ந்த கொசுக்களை அழிப்பதற்கு புகை அடிக்க பயன்படுத்தப்பட்டு வரும் கீழ்க்கண்டவாறு உள்ள இயந்திரங்கள் பழுதடைந்துள்ளதை பழுதுநீக்கம் செய்ய 20.10.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.
<table>
<tr><td>வ. எண்.</td><td>விபரம்</td><td>திரு.பி.ஆனந்த் பெரியகுளம் தேனி மாவட்டம்</td><td>பிரைட் ஏஜென்சீஸ் கோயம்புத்தூர்</td><td>கணேஷ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் கோயம்புத்தூர்</td></tr>
<tr><td>1</td><td>கேஸ்டைப் சிறிய மிஷின்– 1 எண்ணம் ஒன்றுக்கு</td><td>ரூ.6750</td><td>ரூ.6900</td><td>ரூ.6950</td></tr>
<tr><td>2</td><td>Hand fogging Machine -1 எண்ணம் ஒன்றுக்கு</td><td>ரூ.23500</td><td>ரூ.24750</td><td>ரூ.24700</td></tr>
<tr><td>3</td><td>Vehicle mount and Fogging Machine - 1 எண்ணம் ஒன்றுக்கு</td><td>ரூ.51300</td><td>ரூ.54000</td><td>ரூ.54500</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>
வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் மிகக்குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.ஆனந்த் பெரியகுளம் , தேனி மாவட்டம் என்பவரின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

ஆணையாளர்,
மேலூர் நகராட்சி